**சுருக்கம்**

**பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு.சி.திருநாவுக்கரசு (த/பெ (மறைந்த) திரு.க.சிற்றரசு) என்பவருக்கு 07.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.**

**பள்ளிக் கல்வி(தொ.க.1(2))த் துறை**

அரசாணை (1டி) எண்.118

நாள் 27.07.2021.
பிலவ வருடம், ஆடி மாதம் 11
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (1டி) எண்.378, பள்ளிக் கல்வித் (தொ.க.1(2)) துறை, நாள் 24.09.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.59766/ஜே/இ1/2020, நாள் 07.01.2021.

******

**ஆணை:-**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல்ல சமுத்திரம் ஒன்றியம், பாலமேடு அரிஜன காலனி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 15.09.2000-ல் காலமான திரு.க.சிற்றரசு என்பவரது வாரிசுதாரரான திரு.சி.திருநாவுக்கரசு என்பவர் பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, இளநிலை உதவியாளராக 07.01.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.க.சிற்றரசு என்பவர் தகுதிகாண் பருவம் முடித்தவர். அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்ற நிலையில், அவரது மனைவியும் முதல் வாரிசுதாரருமான திருமதி.காந்திமதி என்பார் அவரது முதல் மகன் திரு.சி.மகேந்திரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரி விண்ணப்பித்தார். அச்சமயம் அரசின் பணி நியமனங்களுக்கு தடையாணை அமலில் இருந்ததால் அவரின் விண்ணப்பம் பரிசீலனையில் இருந்தபோது அவரது முதல் மகன் திரு.சி.மகேந்திரன் 15.08.2015 அன்று காலமாகிவிட்டார். இந்நிலையில் அவரது இரண்டாவது மகனான திரு.சி.திருநாவுக்கரசு என்பார் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க 20.04.2017-ல் மாற்று விண்ணப்பம் அளித்துள்ளதை ஏற்று, மாற்று விண்ணப்பத்திற்கு தவிர்ப்பாணை வழங்கி மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர், தனியர் திரு.சி.திருநாவுக்கரசு என்பவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்துவரும் நிலையில் அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

3. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய நிலையில், மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்து, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல்ல சமுத்திரம் ஒன்றியம், பாலமேடு அரிஜன காலனி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.க.சிற்றரசு என்பவரின் வாரிசான திரு.சி.திருநாவுக்கரசு என்பவர் 07.01.2020 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் அவரது பணியினை 07.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும் இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

5. இந்த அரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அ.சா. எண்.10779/ட்டி1/2021, நாள் 06.07.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத்துறையின் அ.சா.எண்.20132/ஜி1/2021-1, நாள் 20.07.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஆணையர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி ஆணையர் வழியாக)

<u>நகல்</u>
மனிதவள மேலாண்மைத்துறை,சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை-9.
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
10/8/21